DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.140/2022 | Deposition of Witness for : PW1 |
| Name : கோபால் | Father/Husband Name : உலகளந்த பெருமாள் |
| Age : 71 | Village : ராமநாதபுரம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 August 2025

A1 present. A2 died.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது ராமநாபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ப.சா.1 வசந்தி எனது மகள் ஆவார். தற்போது அவர் பாண்டிச்சேரியில் குடியிருந்து வருகிறார். எதிரிகளை தெரியாது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு எனது மகளின் நகைகளை யாரோ அறுத்து சென்றுவிட்டார்கள். இதுசம்பந்தமாக எனது மகள் என்னிடம் கூறினார். நானும் எனது மகளும் காவல்நிலையத்தில் புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. **(அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. கடந்த 19.10.2020 ஆம் தேதி மதியம் 3.15 மணியளவில் ப.சா.1 பள்ளிக்கூடத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும் வழியில் அவரது இருசக்கர வாகனத்தில் வரும்போது 15.30 மணிக்கு அடைக்கலாபுரம் அருகே இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் ப.சா.1ன் வாகனத்தை காலால் மிதித்து தள்ளி ப.சா.1ன் கழுத்தில் கிடந்த நகைகளை கொள்ளையடிக்க முயற்சி செய்தார்கள் என்றால் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் தப்பி ஓடும்போது நானும் என்னுடன் மரிய பிரேம் குமார் மற்றும் விஜயகாந்த் ஆகியோர்கள் பிடித்து தட்டார்மடம் காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.08.26 17:15:21 +0530

Judicial Magistrate, Sathankulam.